**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.386 நாள்: 13.08.2026

**பெருங்குடி மண்டலத்தில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை பணிகள் மற்றும் பசுமைப் பரப்பினை அதிகரிக்கும் நடவடிக்கைகள் குறித்து தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பெருங்குடி மண்டலம், வார்டு-181க்குட்பட்ட எம்.ஜி.ஆர். நகர் சந்திப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியினை தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள் இன்று (13.08.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், தெற்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள், கிழக்குக் கடற்கரைச் சாலையில் பசுமைப் பரப்பை அதிகரிக்கும் வகையில் சாலை மையத்தடுப்பில் நடப்பட்டுள்ள அழகுச் செடிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தொடர்ந்து பசுமையுடன் பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, கொட்டிவாக்கத்தில் கட்டப்பட்டு வரும் சென்னை தொடக்கப் பள்ளிக் கட்டடப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வுகளின் போது, மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**